**உடுநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 11 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.1, 1.3.2, 1.3.4 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முக்கிய விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதியதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு என்னால் முடியாது போயிற்று. இதன் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 நிகழ்ச்சித்திட்டகள் சுகாதார சேவையின் கீழான சேவைகளுக்கான கட்டணங்களிற்கு உரித்தாக ரூபா 289,280 தொகையான பதிவுக் கட்டணமும் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் பௌதீகத் திட்டத்தின் கீழ் சேவைகளுக்கான கட்டணங்களிற்கு உரித்தான ரூபா 740,530 தொகையான செயலாக்கக் கட்டணங்கள் பேரேட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், நிதி மற்றும் செயற்பாட்டுக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தாகச் செலுத்தப்படாதிருந்த சம்பளங்கள் மற்றும் படிப்பணத்திற்காக ரூபா 138,828 தொகையான பணம் கடன்கொடுத்தோராக முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் இதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 702,888 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 564,060 தொகை கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆதன மற்றும் பொறிகளுக்கு உரித்தான கணக்கீட்டுப் பதிவுகளுக்கு ஆதனங்கள் மற்றும் பொறிகளுக்கு மீளாய்வாண்டின் பெறுமதி சேர்ப்பனவுகள் ரூபா 39,256,966 தொகையான போதிலும், இது ரூபா 66,256,966 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ஆதனங்கள் மற்றும் பொறிகள் ரூபா 27,000,000 கூடுதலாக மூலதனமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே மூலதனச் செலவினத்திற்கு வருமானத்தில் பங்களிப்புச் செய்யும் கணக்கும் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெறவேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கின் மீதி பேரேட்டின் படி, ரூபா 31,033,898 தொகையான போதிலும் நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 36,154,871 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,120,973 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 99,986 கூட்டுத்தொகையான 02 கழிவறை நிர்மாணிப்புச் செயற்திட்டங்களின் பெறுமதி கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்களை மேம்படுத்துவதற்காக 05 சந்தர்ப்பங்களின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 1,081,063 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது 07 நிலையான வைப்புக்கள் பணமாக்கப்பட்டு மீளப் பெறப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அக் காலப்பகுதிக்கு உரித்தான ரூபா 359,053 தொகையான வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது மொத்த செலவினம் கணக்கீட்டுக் குறிப்பு இல. 02 இன் படி, ரூபா 33,866,863 தொகையான போதிலும் இது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 32,866,863 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் செலவினம் ரூபா 1,000,000 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது தளபாட உபகரணங்களும் அலுவலக உபகரணங்களும் ஏலவிற்பனை செய்யப்பட்டதில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 58,750 தொகை வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அப் பொருட்களின் கிரயம் உரிய சொத்துக் கணக்கில் இருந்து அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் போது 04 மாதங்களுக்கு உரித்தான செலுத்தப்பட வேண்டிய பங்களிப்பு ஓய்வூதியம் ரூபா 32,907 தொகை பொது வழங்கல் கடன்கொடுத்தோரின் கீழும் செலுத்தப்படாத சம்பளங்கள் மற்றும் ஊதியத்தின் கீழ் இரு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) எதிர்வரும் ஆண்டுகளுக்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 115,097 தொகையான வீதவரி மீளாய்வாண்டிற்கு உரித்தான பெறுவனவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் மீதி கடன் பதிவேட்டின் படி ரூபா 7,602,443 தொகையாகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 8,299,991 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படி, மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 181,430,577 தொகையான போதிலும் பட்டோலையின் படி, அம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 157,359,342 ஆகக்

காணப்பட்டமையால் ரூபா 24,071,235 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 58,526,720 தொகையானதுடன் அதில் 05 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,435,675 தொகையாகவும் 01 முதல் 05 வருடங்களிற்கு உட்பட்ட காலத்திற்கு உரித்தான கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,613,363 தொகையாகவும் காணப்பட்டது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,325,890 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 33,266,106 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

04 கணக்கு விடயங்களிற்கு உரித்தான தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 191,412,629 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திரகமாக சான்றுறுதிப்படுத்தவோ/ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| **1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை** | |
| 217 | சுபைக்குரித்தான சகல காணி கட்டிடங்கள் தொடர்பான ஓர் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு தடவையும் ஒவ்வொரு வாகனத்தினதும் பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் 07 வாகனங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 9,709,300 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 6,094,894 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 3,614,406 தொகையால் பற்றாக்குறை அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு**

(அ) செயற்பாட்டு வருமானப் பற்றாக்குறை

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டின் போதுமான நிதி விளைவுகளின் பற்றாக்குறை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாகக் கருத்திற்கொள்கையில் அதிகரிப்பைக் காண்பித்தது.

(ஆ) மொத்த வருமானமும் மொத்த செலவினமும் ஒப்பிடல்

மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டுகளினதும் மொத்த செலவினம் மொத்த வருமானத்தின் சதவீதமாகக் கருதப்படுகையில் அந் நூற்றுவீதத்தில் அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியதுடன் அது நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலையைக் காண்பிக்கவில்லை.

(இ) பற்றாக்குறையின் அதிகரிப்பு

மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த பற்றாக்குறை முன்னைய ஆண்டின் பற்றாக்குறையுடன் ஒப்பிடப்படுகையில் பற்றாக்குறையில் ரூபா 3,614,406 தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் போது 03 வருமான விடயங்களில் 12 சதவீதம் முதல் 26 சதவீத வருமானக் குறைவும் 02 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான செலவின அதிகரிப்பும் இதற்கு முக்கிய காரணமாகியிருந்தன.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்**

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | பட்டியலிடப் பட்டவை | 2015 ஆம் ஆண்டில் வழங்கப் பட்ட கழிவு | 2015 ஆம் ஆண்டில் பெறுவனவு குறைவாகக் கிடைக்கப் பெற்றமை | 2015 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்டவற்றிலிருந்து பெறுவனவு | 2015.12.31 இல் உள்ளவாறு நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 11,668,770 | 4,944,332 | 74,388 | 1,278,507 | 2,313,938 | 12,946,269 |
| குத்தகை வாடகை | 271,316 | 1,168,080 | -- | 209,984 | 946,762 | 282,650 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | -- | 3,330,325 | -- | -- | 3,330,325 | -- |
| ஏனைய வருமானம் | 2,148,369 | 39,733,581 | -- | 15,120,176 | 8,048,307 | 18,713,467 |
| **மொத்தம்** | | | | | | 31,942,386 |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 31,942,386 தொகையான நிலுவை வருமான மீதி அவதானிக்கப்பட்டது.

**2.3.2 வீதவரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை வீதவரி மீதி ரூபா 11,668,770 தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான பட்டியலிடப்பட்டவை ரூபா 4,944,332 ஆகக் காணப்பட்டன. இவற்றில் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் முறையே ரூபா 1,278,507 தொகையும் ரூபா 2,273,227 தொகையும் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன. இது நூற்றுவீதமாக 11 சதவீதமாகவும் 46 சதவீதமாகவும் காணப்பட்டமையால் வருமானச் சேகரிப்பு நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி, வீதவரி அறவிடப்படுகையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய நிதி முறைகேடுகள் கண்டறியப்பட்டிருந்தமையால் ஆரம்ப நிலுவை மீதி, ஆண்டின் போது பட்டிடலிடப்பட்டவை மற்றும் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 11,532,343, தொகையும் ரூபா 4,930,332 தொகையும் ரூபா 12,795,843 மீதிகளின் சரியான தன்மை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

(இ) வீத வரிப் பதிவேடு முறையாப் பராமரிக்கப்பட்டிராததுடன் பெருமளவிலான வீதவரி இலக்கங்கள் போலியாகக் கணனியில் இருந்தும் அகற்றப்பட்டிருந்தமையால் வீதவரி அறவீடுகள் முறைப்படி பரீட்சிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

### 2.3.3 குத்தகை வாடகை

2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட குத்தகை வாடகை ரூபா 271,316 தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பட்டியலிடப்பட்டவை ரூபா 1,168,080 ஆகக் காணப்பட்டது. இவற்றில் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 209,984 தொகையும் ரூபா 946,762 தொகையும் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித்திகதியில் ரூபா 282,650 தொகையான நிலுவைக் குத்தகை வாடகை மீதி நிலவியதுடன் அப் பணத்தை அறவிடப்படுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏக்கர் வரி

2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ஏக்கர் வரி மீதி ரூபா 136,426 தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பட்டியலிடப்பட்டவை ரூபா 14,000 ஆகக் காணப்பட்டன. 2015 ஆம் ஆண்டின் போது எந்தத் தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 150,426 தொகையான நிலுவை மீதி காணப்பட்டது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,054,792 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 29,054,424 தொகையும் பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பதவியணி நிர்வாகம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 20 பதவிகள் வெற்றிடமாகவும் 06 பதவிகள மிகையாகவும் காணப்பட்டன.

### 3.2 வெளிப்படையான முறைகேடுகள்

பிரதேச சபையின நாளாந்த வீதவரிப் பெறுவனவுகளும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண அறவீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 2011 முதல் 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரித்தாக ரூபா 1,234,483 தொகையான நிதி முறைகேடு இடம்பெற்றிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.3.1 எலமல்தெனிய தஸ்கர வீதி (உவைஸ் காஜியார் மாவத்தை) වෙල් යායේ பாதுகாப்பு மதகு நிர்மாணித்தல் ரூபா 359,277

இத் தொழில் தொடர்பாக 2016 மார்ச் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டின் பிரகாரம் பாதுகாப்பு மதகிற்காக 6"x9" அளவிலான கருங்கல் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அந்த அளவைப் பார்க்கிலும் கூடுதலான 20"x8", 14"x8" என்ற அளவுகளிலான பெரிய கற்கள் பயன்படுத்தப்பட்டு மதகு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாதுகாப்பு மதகு 1: 5 சீமேந்து மணல் கலவையால் பூச்சிடப்பட வேண்டிய போதிலும், பயன்படுத்தப்பட்டிருந்த கலவை கையால் உடைக்கக் கூடிய அளவில் நலிவான நிலையில் காணப்பட்டது.

(இ) நிர்மாணிக்கப்பட்டிருந்த மதகு நிலத்தில் இருந்து மேற் பகுதியில் நீர்க் கசிவுத் துளைகளைக் காணமுடியவில்லை.

#### 3.3.2 லுணுகம முதல் சிராகம இரத்திரபோவ வீதி மேம்பாடு - ரூபா 500,000

இத் துறை தொடர்பாக 2016 மார்ச் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) பாதுகாப்பு மதகு அமைக்கப்படுகையில் 6"x9" அளவிலான கருங்கல் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அந்த அளவைப் பார்க்கிலும் கூடுதலான 20"x8", 14"x8" என்ற அளவுகளிலான பெரிய கற்கள் பயன்படுத்தப்பட்டு மதகு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மதிப்பீட்டின் பிரகாரம் மதகின் வெளிப்பகுதி பூச்சிடப்பட்டு மதகை நிர்மாணிப்பதற்காக 1: 5 அளவிலான சீமேந்து மணல் கலவையால் பூச்சிடப்பட வேண்டிய போதிலும், பயன்படுத்தப்பட்டிருந்த கலவை அந்த அளவைப் பார்க்கிலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக வெளிப் பூச்சு எளிதில் உடைக்கக் கூடிய அளவில் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 3.3.3 உருலாவத்த கண்ணகி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் வான்கமுவ வீதி மேம்படுத்தல் ரூபா 237,500

---

இச் செயற்பாடு தொடர்பாக 2016 மார்ச் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) இவ் வீதிக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு மதகின் இரு மருங்கிலும் வேலை பூர்த்திசெய்யப்பட்டிராதிருந்ததன் காரணமாக இதன் எதிர்கால உறுதிப்பாடு குறித்து நிச்சயமற்ற நிலை காணப்பட்டது.

(ஆ) மதகிற்காக 6"x9" அளவிலான கருங்கல் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அந்த அளவைப் பார்க்கிலும் பெரிய கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(இ) மதிப்பீட்டின் பிரகாரம் மதகின் வெளிப்பகுதி 1: 5 அளவிலான பூச்சுக் கலவை பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், பயன்படுத்தப்பட்டிருந்த கலவை எளிதில் உடைக்கக் கூடிய அளவில் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 3.4 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் 02 வாகனங்களில் 35 நாட்களிற்கான ஓட்ட அட்டவணையில் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தர் கையொப்பம் இடப்பட்டிராததுடன் இவ்வாறு பயணம் செய்த உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியிராத 3158 கிலோ மீற்றர் அளவிலான பயணத்திற்காக எரிபொருளிற்காக ரூபா 37,501 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் பயணம் தொடர்பான விபரமும் பயணித்த உத்தியோகத்தர் தொடர்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், 03 வாகனங்களில் 2015 மே மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியின் போது செயலாளரின் அறிவுறுத்தல்களின் படி, உத்தியோக பூர்வ நடவடிக்கை எனக் குறிப்பிடப்பட்டு 11738 கிலோ மீற்றர்கள் ஓடப்பட்டு ரூபா 157,463 தொகையான எரிபொருளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

சகல அரசாங்க வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட வேண்டிய போதிலும், சபையிடம் உள்ள தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள 04 வாகனங்களும் 1994 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 26/92/01 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச இலட்சினையோ அல்லது நிறுவகத்தின் பெயரோ பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 04 வருமான விடபங்களில் 15 சதவீதம் முதல் 46 சதவீதம்

வரையும் 07 செலவின விடபங்களில் 18 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

(அ) 2013 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்டிருந்த ரூபா 437,064 பெறுமதியான உடுநுவர பாரம்பரியக் கதைகள் உள்ளடங்கிய 736 நூல்கள் 02 வருட காலமாக விற்பனை செய்யப்படாதிருந்தன.

(ஆ) சபையிடம் காணப்பட்ட ரூபா 116,000 பெறுமதியான துவிச்சக்கர வண்டி ஒன்றும் ரூபா 1,525,000 பெறுமதியான மோட்டர் வாகனம் ஒன்றும் முறையே 03 ஆண்டுகளிற்கும் 04 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்த 252 – 6359 ஆம் இலக்க கப் வண்டி கைதவிர்க்கப்படுவதற்கோ அல்லது பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) வாகனக் கட்டுப்பாடு